திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார விபத்தின் காரணமாக இறந்துவிடுகிறவரின் மனைவிக்கு ஏதேனும் வேலை கொடுக்க வாய்ப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பணிக் காலத்தில் விபத்தில் இறந்துவிட்டால், அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை தரவேண்டும் என்று மின்சார வாரியம் முடிவு எடுத்துள்ளது.

ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் மின்வாரியம் பெற்றுள்ள கடன்.

*வினா எண். 62—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்வாரியம் 1978–79-ல் எல்.ஐ.சி. நிறுவனத்திடம் கடன் பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) எந்தப் பணிக்காக வாங்கப்பட்டது?

(ஈ) எவ்வளவு வட்டி?

(உ) எத்தனை ஆண்டில் திரும்ப செலுத்த வேண்டும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) & (இ) தூத்துக்குடி அனல் மின் திட்டம், சுருளியாறு திட்டம் மற்றும் மின் வினியோகம் அனுப்புதல் திட்டங்களுக்காக எட்டு கோடி ரூபாய் கடன் பெறப்பட்டுள்ளது.

(ஈ) 11 சதவீதம்.

(உ) 15 ஆண்டுகளில் திரும்பச் செலுத்த வேண்டும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, எல்.ஐ.சி.யிடமிருந்து அல்லாமல், அரசாங்கத்தின் வேறு ஏதாவது நிதி ஸ்தாபனங்களிடமிருந்து மின் வாரியம் ஏதேனும் கடன் தொகை பெற்றுள்ளதா? அப்படியானால், எந்தெந்த ஸ்தாபனங்களிடமிருந்து என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அரசாங்கத்திடமிருந்து கடன் பெறுகிறது. அதேபோல் வெளி மார்க்கட்டிலிருந்து கடன் பெறுகிறது. எல்.ஐ.சி.யிடமிருந்து கடன் பெறுகிறது. Rural Electrification Corporation யிடமிருந்து கடன் பெறுகிறது. பாங்குகளிடமிருந்து கடன் பெறுகிறது. ஹட்கோவிடமிருந்தும் கடன் பெற்று இருக்கிறது.

1979 நவம்பர் 2]

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, கூடுமானவரையில் எல்லா இடங்களில் இருந்து கடன் பெற்று தொடங்கப்பட்டிருக்கிற திட்டமான தூத்துக்குடி அனல் மின் திட்டம், எண்ணூர் அனல் மின் திட்டம் ஆகியவற்றின் உற்பத்தித் திறன் திட்டமிடப்பட்டுள்ள உற்பத்தித் திறனை விடக் குறைவாக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு. கே. சி. பந்த் அவர்கள் அரசுக்குக் கடிதம் எழுதி இருக்கிறார் என்று செய்தி வந்து இருக்கிறது. அதன் அடிப்படையில் அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் திட்டம் இப்போதுதான் தொடங்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அது ஓரளவிற்கு நிலைநிறுத்தம் Stabilisation இன்னும் ஆறு மாத காலம் ஆகும். ஒரு வருஷம்கூட ஆகலாம்.

எண்ணூர் அனல் மின்திட்டத்தைப் பொறுத்தவரையில், அது தன்னுடைய உற்பத்தித் திறன் அளவிற்கு குறைந்துதான் பணியாற்றுகிறது. எண்ணூர் அனல் மின் திட்டம் மட்டுமல்ல, இந்தியாவின் பல அனல் மின் திட்டங்கள் அப்படிதான் செயல்படுகின்றன. அதற்கு பெரும்பாலும் ஒரு காரணம், அந்த மின் திட்டங்களில் பயன்படுத்தப்படுகிற கொதிகலன்களைத் தரக் கூடியது மத்திய அரசாங்கத்தின் நிறுவனம் பி.எச்.இ.எல். Bhart Heavy Electricals Limited ஒன்றுதான். அங்கேயிருந்துதான் மின்சார வாரியத்திற்குத் தேவையான கொதிகலன்களை அனைத்து மாநிலங்களும் வாங்க வேண்டியுள்ளது. அதுவும் வளர்ந்து வருகிற நிறுவனம். போதிய தொழில் நுட்பம் வளராத காரணத்தால் இந்தப் பிரச்னை ஏற்படுகிறது. ஆகவே, தமிழகம் மட்டும் இதற்கு விதிவிலக்கு அல்ல. இந்தியா முழுமையும்தான் இந்நிலை. மத்திய அமைச்சர் திரு. கே. சி. பந்த் அவர்கள் பொறுப்பைத் தட்டிக் கழிக்க இயலாது.

திரு. க. சுப்பு: ஒரு எக்ஸ்பிளனேஷன் .....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு அவர்கள் உட்கார வேண்டும். இந்தப் பழக்கம் தவறு.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் திட்டம் எப்போது உற்பத்தியைத் தொடங்கும்? ஏன் இவ்வளவு கால தாமதம்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: முதல் யூனிட் ஏற்கனவே தொடங்கப்பட்டு, நடைமுறையில் உள்ளது. இரண்டாவது, மூன்றாவது யூனிட்டுகள் படிப்படியாக முடிக்கப்படும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, மின்சார வாரியம் இதுவரை மொத்தமாகப் பெற்றுள்ள கடன் எவ்வளவு? அசட் எவ்வளவு? என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் அந்த விவரத்தை தர இயலும்.

திரு. க. மருதாசலம்: தலைவரவர்களே, தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது? அதற்கு அரசாங்கத்தினுடைய மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, எல்.ஐ.சி. கடன் வாங்கியதைப்பற்றியது கேள்வி. தூத்துக்குடி அனல் மின் திட்டத்தைப்பற்றிக் கேட்டால், அதுபற்றி தற்போது தகவல் இல்லை.

திரு. க. சுப்பு: சார், பாயின்ட் ஆப் ஆர்டர், ரிலவன்ட் கேள்வியைக் கேட்டால்கூட பதில் இல்லை என்கிறார். சம்பந்தப்பட்ட கேள்விக்கு அவர் பதில் சொல்லலாம் இல்லையா? அதற்கு . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அப்புறம் கேளுங்கள். உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். இப்போது உட்காருங்கள்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, தூத்துக்குடி அனல் மின்சார நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் தென் மாவட்டங்கள் முழுவதற்கும் போதும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் தொடங்கப்பட்ட நாளிலிருந்தே அது மூடப்பட்டிருக்கிறது; ஸ்டெபிலைஸேஷனுக்கு ஆறு மாதம் ஆகிறது என்று சொல்கிறார்கள். அதைத் துரிதப்படுத்த வெளிநாட்டிலிருந்து உதவி பெற ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மீண்டும் நான் சொல்கிறேன். இது மின்சார வாரியத்தினுடைய நிதிநிலையைப் பொறுத்து எங்கெங்கிருந்து கடன் வாங்குகிறார்கள் என்ற கேள்வி. தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டத்தைப்பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், அதற்கு தனியாகக் கேள்வி போட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறபடி வெளிநாட்டிலிருந்து எந்தத் தொழில் நுட்ப உதவியும் பெறுவதாக இல்லை.

1979 நவம்பர் 2]

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், எல்.ஐ.சி.யிடமிருந்து 8 கோடி ரூபாய் 11 சதவிதம் வட்டிக்கு வாங்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். தொழில் அபிவிருத்தி என்ற பெயரால் 4 சதவிதம் வட்டிக்கு கடன் கொடுக்கப்படு கிறது. அப்பேர்ப்பட்ட தொழிலுக்கு மின்சாரம் கொடுக்கக்கூடிய இந்த அமைப்புக்கு அந்த அளவுக்கு குறைந்த வட்டிக்கு ஏன் கடன் வாங்கவில்லை? குறைந்த வட்டிக்கு வாங்க முயற்சி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஆங்கிலத்திலே சொல்வார்கள். Beggars are not chasses என்று சொல்வார்கள். இந்த வட்டிக்குத்தான் கொடுக்கிறார்கள். வேண்டுமென்றால் வாங்கிக் கொள்ளலாம்; இல்லை என்றால் இந்த வட்டி கொடுக்கக்கூடிய வேறு யாருக் காவது கொடுப்பார்கள்.

திருப்புல்லானி-தொண்டி பகுதியிலுள்ள புறம்போக்கு நிலங்கள்

*வினா எண். 63.—**திரு. த. இராமசாமி :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லானியிலிருந்து தொண்டி வரையி லுள்ள சாலையின் கீழ்ப்புறம் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களை நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு கொடுக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, திருப் புல்லானியிலிருந்து தொண்டி வரையிலுள்ள சாலையின் கிழ்ப்புறம் உள்ள அரசு நிலங்களை யாருக்கும் ஒதுக்கீடு செய்யவில்லை. காரணம் சேது சமுத்திரம் திட்டங்களுக்காக அந்த நிலம் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, இது என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்டது. இந்தப் பகுதியிலே அதிகமாக புறம்போக்கு நிலம் உள்ளது. இந்த நிலங்களை, மதிப்பிற்குரிய வருவாய்த் துறை அமைச்ச ரவர்கள், யார் வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் வளைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். ஆகவே, இந்தப் பகுதியிலே எந்த அளவுக்கு, எப்படி நிலம் கொடுக்கப்படும் என்பதைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, திருப்புல் லானியிலிருந்து தொண்டிக்கு செல்லும் சாலைக்குக் கிழக்குப் பக்கத்தில் இருக்கிற நிலம் எல்லாம் சேதுசமுத்திரத் திட்டங்களுக்காக வைக்கப்பட் டிருப்பதால் யாருக்கும் கொடுக்கக் கூடாது என்று அரசு முன்னையேலேயே